1991 சனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியேற்றப்பட்டவர்கள் இன்று முழுவதும் அவைக்கு வர முடியாது.(குறுக்கீடுகள்) உட்காருங்கள், அடுத்து சில அறிவிப்புகள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

3. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்கள் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் மற்றும் திரு. கொ. மாதப்பன் ஆகியோரின் பதவி விலகல்களை ஏற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. செங்கை அண்ணா மாவட்டம், அச்சரப்பாக்கம் தனிச் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து 2-1-1991 முதல் விலகிக் கொண்டு உள்ளார்கள் என்றும் அரசமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3-பி உட்பிரிவின்படி அப்பதவி விலகல் அந்தத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த அறிவிப்பு. தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்றப் பேரவைத் தொகுதி உறுப்பினர் திரு. கொ. மாதப்பன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து 18—1—1991 முதல் விலகிக் கொண்டுள்ளார்கள் என்றும், அரசமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3-பி உட்பிரிவின்படி அந்தப் பதவி விலகல் அந்தத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி பிரதான எதிர்க்கட்சியாகவும் சட்டமன்றப் பேரவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவும் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது குறித்து.

10-55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு அடுத்த அறிவிப்பு. திரு. கொ. மாதப்பன் அவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக் கொண்டுள்ளதன் விளைவாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சி பிரதானஎதிர்கட்சித் தகுதியினை இழந்துவிட்டதன் காரணமாகவும், இந்திய தேசியக் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக உள்ளதால் அக்

[பேரவைத் தலைவர்] [1991 சனவரி 21

கட்சியின் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி மீது—பேரவைத் தலைவருடைய செயல்பாடுகள் பற்றி பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளது குறித்து.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 220-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலேயும், பொது மக்களிடையே தவறான எண்ணத்தை உருவாக்கும் வகையிலேயும் அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றி பத்திரிகை நிறுவனத்திற்கு, நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் சொன்னச் செய்தி, ''தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து'' ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது, அது அவை உரிமை மீறிய செயல் ஆகும். இதற்கான பத்திரிகை நகல்களை தங்களுக்குக் கொடுத்துள்ளேன். இதைப் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள தங்கள் அனுமதி வேண்டுகிறேன். திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் ஒரு பொறுப்புள்ள கட்சியின் தலைவர் என்கின்ற வகையிலேயும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலேயும் .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே வெளியேற்றப்பட்டவர்கள் இன்றைக்கு முழுவதும் அவைக்கு வரக்கூடாது என்று அறிவித்திருக்கிறேன்.

திரு. கே. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நடக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளில் தாங்கள் அளித்த தீர்ப்பு நிறைவேற்றப்படாமல், அந்தத் தீர்ப்பை மீறி நடப்பதும், திரும்பவும் அதை மீறி வருபவர்கள் சபையிலே அந்தக் காரியத்தைச் செய்வது என்பதும் சரியல்ல. எனக்கு எந்த உறுப்பினர் மீதும்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. ஏற்கெனவே அவர்கள் 2 பேரும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். வெளியேற்றி ஆயிற்று. அவர்கள் அவைக்கு ஒரு நாள் வரக்கூடாது என்று சொல்லி ஆயிற்று.